



கைதடியைப் பிறப்பிடமாகவும்
சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் **சின்னவன் கந்தையா**
அவர்களின் சிவபதப்பேறு குறித்த
31 ஆம் நாள் நினைவுமலர்

# கந்தகாருண்யம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கைதடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும்

கொண்ட

# அமரர் சின்னவன் கந்தையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# 31 ஆம் நாள் நினைவுமலர்

## கந்தகாருண்யம்

## 18.01.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காக விளங்கி
அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எமைப் பேணிப்பாதுகாத்து
கற்றவர்கள் மத்தியில் காலூன்ற வைத்து
நற்பிரசைகளாக்கிய பெருமையுடன்
வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது
அன்புத்தெய்வத்தின்
பாதார விந்தங்களில் இந் நினைவுமலரை
சமர்ப்பணம் செய்கின்றோம்

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# சின்னவன் கந்தையா

**அன்னை மடியில்**
**22.07.1934**

**இறைவன் திருவடியில்**
**19.12.2020**

## திதி வெண்பா

சிந்தையில் உதித்த சீரிய பணிகள்
கந்தையாவின் கருணைக் கரங்களால் - சிந்திய
தர்மங்கள் சார்வாரி வருட தமிழ்
மார்கழி வளர் பஞ்சமி தனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே

# பஞ்சபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

## திருவாசகம்

பால்நினைத் தூட்டும் தாயினுஞ்சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரை இலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப் பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்த தானவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

மண்ணினிற் பிறந்தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ணலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருக வென்றுரைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத் தருபத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனஓதும்
முக்கட்பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரும்
முப்பத்துமூவர்க்கத் தமரரும் அடிபேண

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற் கிரதத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித் தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கு நடிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவுரிக்குத் ரிகட கெனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகுகுகு
குத்திப் புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி இட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

எழில்மிகு யாழ் நகரில் கல்வி கலை பண்பாடுமிக்க விளங்கும் ஓர் கிராமமாக கைதடி மேற்கு திகழ்கிறது. இது விவசாய நிலங்களை அதிகமாக கொண்ட ஒரு பிரதேசமாகும். இங்கு விவசாயத்தை மூலதனமாகக் கொண்டு மக்கள் வாழ்வது கண்கூட்டு. இங்கு மேட்டு நில பயிர்ச்செய்கை வல்லுனரான (சின்னவன்) சின்னவன் - சீதேவி தம்பதியினரது இரண்டாவது புதல்வனாக 1934ம் வருடம் ஆடி மாதம் 22ம் திகதி கந்தையா பிறந்தார். இவரது உடன் பிறப்புக்களாக நாதன், இலட்சுமி, சங்கர் பிறந்தனர். இவர்களின் பாசமிகு சகோதரராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

இவர் தமது ஆரம்ப கல்வியை யாழ் கைதடி கலைவாணி வித்தியாசாலையில் மேற்கொண்டார். அவ் வேளையில் இவர் துடுக்கு நிறைந்த ஒரு சிறுவனாகவும் தாச்சி விளையாடுதல், ஒப்பு விளையாடுதல், கிட்டிப்புள்ளு அடித்தல் என்பவற்றில் சிறந்த வீரனாகவும் திகழ்ந்தார். இக் காலபகுதியில் பட்டாசு கொழுத்தி விளையாடும்போது தமது இடது கையின் சுட்டு விரலை இழந்தார். இதன் பின் பாடசாலை கல்வியை நிறுத்திவிட்டு கட்டிட கலை பயின்றார்.

இவ்வாறு கட்டிடகலை வல்லுனராக திகழ்ந்தவேளை இவரது இருபத்துஇரண்டாவது வயதில் பெற்றோர்கள் இவருக்கு மாமன்மகளாகிய வயிரவன் - மயிலி தம்பதியினரின் புதல்வி சின்னம்மாவுக்கு மணம் முடித்து கொடுத்தனர். இவர் தமது இல்லறவாழ்வில் ஒன்பது பிள்ளை செல்வங்களை பெற்று அவர்கள் அனைவருக்கும் கல்வி அறிவு ஊட்டி நற்பிரஜைகளாக உருவாக்கினார். நாட்டின் சூழ்நிலை காரணமாக இருவரை லண்டனுக்கும் எழுவரை சுவிஸ்லாந்துக்கும் அனுப்பி வைத்தார். அவர்கள் இப்போது திருமணமாகி குடும்ப சகிதமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவரது வாழ்வில் பல பறிமாற்றங்களை கண்டு உழைப்பில் உயர்ந்தார். கட்டிட கலைஞராக இருந்த இவர் கட்டிட ஒப்பந்த வேலைகளை செய்யத் தொடங்கினார். பல கட்டிட கலைஞர்களை தம்முடன் இணைத்துக்கொண்டார். சொந்தமாக விவசாய நிலங்களை வாங்கினார். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் விவசாயத் தொழிலையும் மேற்கொண்டார். சொந்தமாக உளவு இயந்திரத்தையும் வாங்கினார். அத்தோடு நிற்கவில்லை கைத்தறி தொழிலையும் மேற்கொண்டார். அதன் மூலம் புற்பாய்களை உற்பத்தி செய்தார். இவர் ஒவ்வொரு தொழிலாளியும் சுயதொழிலை மேற்கொண்டு முன்னேற வேண்டுமென்ற எண்ணப்பாட்டுடன் செயல் பட்டவர்.

சனசமூகநிலையம், விவசாய சம்மேளனம், ஆலயங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் போன்றவற்றில் நிர்வாகியாக விளங்கி சிறப்புசேவை செய்தவர். விளையாட்டு துறையிலும் ஆர்வமாக இருந்த இவர் கரப்பந்தாட்ட விளையாட்டில் சிறந்த வீரனாகவும் திகழ்ந்தார். இவர் சரஸ்வதி விளையாட்டு கழகத்தின் கரப்பந்தாட்ட தலைவனாக செயல்பட்டு பல வெற்றிகளை கண்டவர். இவற்றோடு சமூக சீர்கேடுகளை ஒழிப்பதற்கும் புகைத்தல், மது அருந்துதல், சூதாடுதல், என்பவற்றை களைவதற்கும் உறுதுணையாக இருந்த இவர் இறுதியில் ஆத்மீகவாகியானார். மதுபானங்களை அருந்தாது இருந்த இவர் மாமிசம் உண்ணுவதையும் நிறுத்தினர்.

ஆலயங்கள் தோறும் தேவாரங்கள் படிக்கத் தொடங்கினார். 2000ம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வோடு தன் மனைவியுடன் சுவிஸ்லாந்துக்கு சென்றடைந்தார். அங்கு 2001ம் ஆண்டு தன் மனைவியை இழந்தார். தன் மூத்தமகளுடன் வாழ்ந்து வந்த இவர் 19.12.2020ல் 86 வது வயதில் சுவிஸ்லாந்தில் இறைபதம் அடைந்தார்.

*ஓம் சாந்தி !! சாந்தி !! ஓம் சாந்தி!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் மனக்குமுறல்...

தாயில் சிறந்த கோவிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரமும் இல்லை
உங்கள் பெருமைகளை சொல்ல
வார்த்தைகளே இல்லை தந்தையே.

ஒன்பது செல்வங்களை உலகத்திற்கு
அறிமுகம் தந்த முகவரியே
வாழ்வினிலே துன்பமெனும்
சொல்லையே அறியாமலே
வளர்ந்தோமே நாம்.
அனைவருக்கும் கல்வியையும்
அறிவையும் ஊட்டி வளர்த்தாயே எம் தந்தையே.

எப்பொழுது வீடு வந்தாலும் சினம் கொள்ளாது
எம்மை கட்டியணைத்து மகிழ்த்திடுவாயே.
உன் மகிழ்ச்சிதனில்
நாம் நனைந்த நாட்கள்தான் எத்தனையோ,
நினைக்கையிலே உள்ளம் பதறுதே ஐயா.
பிள்ளைகளின் நலனே பெரிதென்று
உன் இன்பங்களை துறந்தாயே எமக்காக
எம் தந்தையே.

தருமமே உன் கருமமெனே எண்ணி,
உன் இல்லமதை தரும இல்லம்
ஆக்கினாயே தந்தையே .
ஆக்கிய இல்லமதில் தர்மங்கள் பல புரிந்தாயே.
பெருநாள் என்று வந்திட்டாலே
உன் கையாலே பெறுவதே பெரிதென்று,
சுற்றமெல்லாம் கூடிடுவாரே.
உன்னை நினைக்கையிலே
உள்ளம் பெருமிதம் கொள்ளுதே ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் நலம் பாராது ஊர் நலமே பெரிதென்று,
பயமின்றி பல மாற்றங்களை,
உருவாக்கினாயே நம் தேசமதில்.
உன் பெருமைதனை பேசவைத்தாயே
உன் சந்ததி சந்ததியாய்
உன் துன்பம் பாராது
தேசத்தின் நலனே பெரிதென்று
சீர் திருத்தங்களை உருவாக்கினாயே.
உன் எழுச்சிதனை இன்றும்
இளையோர்கள் வியந்தே
பெருமிதமடைகின்றனர்.

கோவில்கள் சென்று பூஜித்திடுவாய்
பல பல பூஜைகள் செய்து மகிழ்ந்திடுவாய்.
கைற்றசிட்டி கந்தனிடம்
உன் கவலைதனை போக்கிடுவாயே.
கந்தனும் உன் கோரிக்கையை
குறைவின்றி நிறைவேற்றினானே.
பெரிய தம்பிரான், நாச்சிமார், அண்ணமார்
வைரவர் என ஆசியும் பெற்றாயே,
அந்த இறைவனும் உன்னை இன்று அழைத்தானே.

கால சுழற்சிதனில் காலங்களின்
மாற்றத்தினால் எல்லாமே
என்னாலும் முடியுமென நிரூபித்தும் காட்டினாயே
வயலென்றும் ,வாக்கால் என்றும்,
தோட்டமென்றும், துரவென்றும்
எமக்கெல்லாம் காட்டினாயே, எம்மருமை தந்தையே.

கடமைதனில் தவறாது காரியங்களில் சிதறாது,
பேதங்கள் பாராதது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறங்கள் சிறந்திடவே,
பிள்ளைகளின் நலனிலே
சிறப்பாக சிந்தித்தாயே.
எம் மண வாழ்க்கைதனை
மகிழ்வித்தாயே எம்மருமை தந்தையே

உலக ஒழுங்கினிலே
ஊரெல்லாம் ஓடையிலே,
எம்முயிரும் பெரிதென்றே
நீ அன்று நினைத்தாயே.
நாமெல்லாம் இன்றும்
இருப்பதுவும் உன்னாலே.
எம் பிரிவு தாளாது - அப்போது
நீ பட்ட துயரமதை நாமறிவோம்
எம் தந்தையே.
பாசமே பெரிதென்று எம் தாயுடன் நீ வந்து
எம் தாயை நீயிழந்த துயரை நாமறிவோம்
எம் தந்தையே.

நாடுகடந்து, மொழியின்றி
எம் தலை சகோதரியுடன்
நீ வாழ்ந்த காலம்தான் மகிழ்வானதே.
மகிழ்வான காலமதை
நாம் மகிழ்வாக கழித்தோமே.
ஊராரும் உற்றாரும்
உன் அகவைதனில் கூடியே
மகிழ்ந்திட்ட நாட்களை எண்ணி
நினைக்கையிலே உள்ளமும்
உருகுதே எம் தந்தையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் கடந்தோடியது
காலச் சக்கரம் சுழன்றோடியது
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள் என
மகிழ்வான காலங்களை
மகிழ்வாக கழித்தாயே
உன் இறுதி காலங்களில்
பேரப்பிள்ளைகள் துணையானதே உனக்கு
உன் விருப்பு ,வெறுப்புகளிலும்
உன் தேவைகளை பூர்த்தி செய்வதிலும்,
உன் கதைகளை கேட்டு
இன்புற்று மகிழ்ந்தனரே
உன் பேரப்பிள்ளைகள்.

உன் இன்ப , துன்பங்களை நாமும் இன்று
மீட்டியே பார்க்கின்றோம் .
ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டவர்கள் மீண்டும் வருவதில்லையே ஐயா,
உன் நினைவுகள் மட்டும்
எம் இதயத்தை விட்டகலாது
எம் வாழ்நாளில் எந்நாளும்.
மேலிருந்து எம்மை வாழ்த்திடு எந்நாளும்.
உன் ஆத்மா சாந்தியடைய
இந்நாளில் வேண்டுகின்றோம் இறைவனிடம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா...!

அன்றாடம் ஆசையாய்
நான் அழைத்த தருணங்கள்.
கண்டிப்பும் கருணையும்
அன்பும் பண்பும் நிறைந்த
ஓர் பொக்கிஷம் தான் நீங்கள்.

தோள் மீது எனை சாய்த்து
"மண்ணுக்கு மரம் பாரமா
மரத்துக்கு இலை பாரமா"
எனும் பாடலை பாடி தினம்
தூங்க வைக்கும் பாங்கே
இன்றும் என் நாளாந்த பாடல்.

குலா குலா என்று அதிகாலை
எழுப்பும் உங்கள் குரல்
இன்றும் எந்தன் காதோடு
கணீராக ஒலிகிகிறதே.

அன்றாட கடமை தொட்டு
அலுக்காத உழைப்பு வரை
பொறுப்பான பிள்ளையாக
ஆளாக்கிய பெருமைதானே.

நோய் வந்து கொள்ள
நோகாமல் உமைத்தாங்க
முடியாமல் போனதுவே.
உமைத் தோள் மீது தாங்காது
தவிக்குதையா நெஞ்சம்.

**மகன்**

**தர்மகுலசிங்கம் (குலம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் வடிவமே அணையாத சுடர்விளக்கே!

ஆசையோடு பெற்றெடுத்த
ஆறாவது மைந்தன் நான்
உருவத்தில் உங்களைப்போல்
திருவடிவம் எனக்களித்தீர்

பூங்கொடிபோல் ஒன்பதுபேரை
பூமியிலே படைத்தவரே!
ஒற்றுமையாய் நாம் வாழ
ஓயாமல் உழைத்தவரே!
அறிவோடு பலகலைகள்
அள்ளி நிதம் தந்தவரே!

இன்பமான வாழ்வுதனை
நாம் வாழ வேண்டுமென்று
கண்டிப்பை எம் வாழ்வில்
கனிவோடு விதைத்தவரே!

உற்றாரும், உறவினரும்
ஊர்வாழும் மற்றோரும்
உயர்வாக வாழ்வதற்கு
உரமதனை இட்டவரே!

மண்ணுலகில் நீர் வாழ்ந்த
மகிழ்வுகள் போதுமென்று
விண்ணுலகிற் கழைத்தானோ பாவியந்தக் காலனவன்

ஆரத்தழுவி அணைத்தழ முடியவில்லையே அப்பா...
வாடி நிதம் வருந்துகின்றோம் நாம், காலமுள்ளவரை
காணத்துடிக்கின்றோம் கண்கலங்கி நிற்கிறோம் அப்பா...

**மகன்**
**ஜெயவீரசிங்கம் (ஜெயக்கொடி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தமகன் குடும்பத்தின் கண்ணீர் காணிக்கை

தாலாட்டி சீராட்டி
தலைமகன் நான் என்று
தரணியிலே தவளவிட்டாய்
வாய் விட்டு சிரிக்க வைத்து
வல்லமை தந்தெம்மை தினம்
வானுயர மிளிர வைப்பாய்
கடமை என்று கண்ணியமாய்
புண்ணியம் செய்வதிலே நீ
புனிதனப்பா.
ஊரென்று உறவென்றும்
உளமார உருகி நிற்பாய்
உறுத்துதப்பா உந்தன்
அருகில் இல்லாது போனதனால்.
நோய் வந்து உனையாள
நொந்து மனம் போனதையா
வெந்து நெஞ்சம் வேகியது
அருகில் வந்து ஆறியள
ஐயனே முடியவில்லை.
கொள்ளிவைக்க கூட
கொடுத்து வைக்கவில்லை.

மாமா என்றழைத்து
மனமுகர்ந்த காலமதை
மனதார எண்ணுகையில்
மனம் நொந்து போகுதே மாமா.
ஒரு சொட்டு கண்ணீர்
உம் அருகே சிந்தாமல் போன
பாவிகளாய் வேகுதே நெஞ்சம்
அன்றாட அரவணைப்பில்
எந்நாளும் வாழ்வது போல
கண்ணோடு கனவாகிப்
போகிறதே மாமா.
உங்கள் கனிவான வாழ்வுகள்

அப்பப்பா
அன்றாடம் தோள் மீது
கண்ணயர்ந்த காலங்கள்
கண்ணெதிரே வந்து போக
கண்ணும் நீர் சுரக்குதே
உங்கள் குரலும் தினம்
காதில் ஒலிக்குதே.
பாட்டனா நாமிருந்தும்
பந்தம் பிடிக்க முடியாத
பாவிகளாய் பரிதவித்தோம்.
உங்கள் ஆத்மா சாந்தி கொள்ள
இறைவனை வேண்டுகிறோம்.

**பூபால், சறோ,**
**பேரப்பிள்ளைகள்**
**ரஜாந்த் - ஆர்த்தி, அஜாந்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணைமாமா உங்களை
# சா அணைத்துக்கொண்டதே...!

ஏனையோர் என்றொதுக்காது -எவரையும்
ஏணைபோல் அரவணைத்து
பானையினை பகிர்ந்து
வானையும் முட்ட வழிகாட்டிய
சாணைமாமா உங்களை
சா அணைத்துக்கொண்டதே...!

மண்டியிடா மானம்
மரபு வந்த வீரம்
திடலில் திகழும் விளையாட்டு
கடவுள் புகழும் வழிபாடு
காலம் தாண்டி நிற்கும் கட்டிட கலை
ஞாலம் உண்டிட வீட்டில் அணையா உலை
நெறிப்படுத்திய உங்கள் வாழ்வை
குறிப்பெடுத்து கற்கவைத்தீர்

மறு ஏதுமின்றி -தன்
மக்கள் போலவே அன்பினில்
மறுப்பேதுமில்லை
மாறா அமைதி கொள்வீர்..!

**மைத்துனர்**
**(சின்னமாமா)**
**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் அஞ்சலியும் அஞ்சலி உரையும்

22.12.2020 செவ்வாய்கிழமை அன்னாரது இல்லத்தில் 3.00 மணிக்கு அவரின் இளைய சகோதரனாகிய சங்கர் முதல் மலர்மாலை செலுத்தியதை தொடர்ந்து ஏனையோரால் மாலை அஞ்சலியும் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

**அதனைத் தொடர்ந்து சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் வா.அருந்தவபாலன் தலைமையில் இரு நிமிட மௌன வணக்கத்துடன் அஞ்சலி நிகழ்வு ஆரம்பமானது.**

அவரது உரையில் இருந்து....

அமரர் திரு.சி.கந்தையா அவர்கள் எமது நிலையத்தின் ஆரம்ப காலத்தில் இருந்து அங்கத்தவராக இருந்து செயல் பட்டு வந்தவர். இவர் சைக்கிள் ஓட்டம், தாச்சி விளையாடல், ஒப்பு விளையாடுதல் இவற்றில் திறமையாக விளையாடியவர். கரப்பந்தாட்டத்தில் அதன் தலைவராக இருந்து பல வெற்றிக் கேடயங்களை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் பெற உறுதுணையாக இருந்தவர். அது மட்டுமல்ல எமது நிலையத்தின் போசகராகவும், தலைவராகவும், நிர்வாக உறுப்பினராகவும் சேவை ஆற்றியவர்.

**க.பாலசிங்கம்**
**கைதடி தெற்கு சனசமூகநிலையம்**
**உறுப்பினர்.**

அவரது உரையில் இருந்து ...

உடல் பலமும் மனத்திடமும் கொண்ட அமரர் கந்தையா அவர்கள் தாம் எடுத்துக் கொண்ட விடையங்களை நிறைவு பட செய்பவர். பிரிந்து சென்ற குடும்பங்களை இணைத்து வைத்தவர். 30 பேர்வரை கொண்ட கட்டிட கலைஞர்களை ஒருங்கிணைத்து கட்டிட வேலைகளை செய்தவர். இவருடன் இணைந்து வேலை செய்பவர்களின் நல் ஒழுக்கம் உடையவர்களாகவே காணப்பட்டார்கள் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீ. இராமச்சந்திரன்**
**பெறாமகன்**
**கைதடி தெற்கு.**

அவரது உரையில் இருந்து ...

அமரர் கந்தையா அவர்கள் என்னை வளர்த்த சிறிய தந்தையார் ஆவர். நான் இவரை குலம் அப்பா என்றே அழைப்பேன். இவர் அன்பாக பேசுவதன் மூலம் எம்மை நல்வழிப் படுத்துவார். அதை மீறும் பட்சத்தில் கடுமையாக நடந்து கொள்வார். இவர் கம்பீரமான உடல் கட்டமைப்பும் பலமும் கொண்டவர். ஒரு தடவை வேலி போடுவதற்கு என சில காட்டு கட்டைகளை சேகரித்து வைத்திருந்தார். அதை அபகரித்து செல்லும் நோக்கில் நான்கு காடையர்கள் உழவு இயந்திரத்தில் அதை ஏற்றிக்கொண்டு இருந்தார்கள். அவ் இடத்துக்கு ஓடிச்சென்ற குலம் அப்பா துள்ளி உழவு இயந்திரத்தில் ஏறி நான்கு பேர் கஸ்டப்பட்டு தூக்கி ஏற்றிய கட்டைகளை சர்வசாதாரணமாக தூக்கி வெளியில் வீசினார். அதை கண்ட காடையர்கள் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடிச்சென்றனர். இதனை நான் என் கண்களால் கண்டேன் என்றார்.

**சி.நிசாகரன்**
**சிரேஸ்ட உத்தியோகத்தர்**
**வடக்கு மாகாண சபை**
**கைதடி**
**அவரது உரையில் இருந்து ...**

அமரர் கந்தையா அவர்கள் எனது பெரிய தந்தையார் ஆவார். அவர் சில விடயங்களுக்கு என்னுடன் ஆலோசிப்பதுண்டு அவருடைய எல்லாப்பிள்ளைகளும் காலத்தின் சூழ்நிலை காரணமாக வெளிநாடுகளில் தங்கியுள்ளனர். இவரை வெளிநாட்டுக்கு அழைத்த பொழுது இவருக்கு தாய் நாட்டை விட்டு செல்வதில் விருப்பு இருக்கவில்லை தாம் வெளிநாடு செல்லவேண்டிய சூழ்நிலையை என்னிடம் கூறி கவலைப்பட்டார். இதே போன்று எவ் விடையமானாலும் மற்றவர்களுடன் கதைத்து பேசியே ஒரு முடிவு காண்பவர் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி.சிவலிங்கம்**
**முன்னாள் தலைவர்**
**வளர்மதி சனசமூகநிலையம்**
**கைதடி மத்தி**
**அவரது உரையில் இருந்து சில துளிகள்...**

அமரர் கந்தையா அவர்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், ஒடுக்கப்பட்டவர்கள் இவர்களில் இருந்து தலைவர்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணக்கரு உடையவர்.

1975ம் ஆண்டு காலப்பகுதியில் எம்மவர் ஒருவர் சமாதான நீதவான் ஆக வேண்டும் என்று எமது சனசமூகநிலையம் முயற்சிசெய்த வேளை அதற்கு துணை நின்று அக்கோரிக்கையை வலுவுடையதாக்கி வெற்றிகரமாக செய்வதற்கு உதவியவர்களில் அமரர் கந்தையாவும் ஒருவர் ஆவார். மொத்தத்தில் அவர் ஒரு பொதுவுடமை சிந்தனையுடைய இடதுசாரி போக்குடையவர்.

**இ.கந்தசாமி J.p**
**முன்னால் தலைவர்**
**செல்வா சனசமூக நிலையம்**
**கைதடி வடக்கு**
**அவரது உரையில் இருந்து....**

பல பரிமானங்களை உடைய அமரர் கந்தையா அவர்கள் கட்டிட கலை வல்லுனர் மட்டுமன்றி ஒப்பந்தகாரராகவும் செயல்பட்டார். விவசாயம் செய்தல், தறி அடடித்தல், என சுயமுயற்சிகளையும் மேற்கொண்டார். இவருடன் சிலர் குழுவாக சேர்ந்து உடையார் கட்டில் காடு வெட்டி களனி கண்டதை நான் கண்ணூடாக கண்டேன் என்றார்.

**பா.கிருஸ்ணன்**
**முன்னாள் செயலாளர்**
**சரஸ்வதி சனசமூக நிலையம்**
**கைதடி மேற்கு**
**இவர் உறையில் இருந்து...**

அமரர்.கந்தையா அவர்கள் சரஸ்வதி சனசமூகநிலையத்தில் தலைவராக இருந்த வேளையில் நான் அதன் செயலாளராக இருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது செயல்பாட்டு திறன்கள் சிலவற்றை நேரடியாக கண்டவன் நான். அவர் எடுத்த முயற்சிகளில் சோர்வு காணாது முடிப்பதில் வல்லவராகவும் சமூகசீர்கேடுகள் களைவதில் ஆர்வமுள்ளவராகவும் செயல்பட்டார். சமூக சீர்கேடுகள் சில இன்றும் சமூகத்தில் வியாபித்து இருப்பதை காணக்கூடியதாக உள்ளது சொல்லப்போனால் மொத்தத்தில் சமூகம் என்னும் திருந்தவில்லை என்றார்.

**வே.சின்னத்தம்பி**
**கைதடி தெற்கு,**
**சனசமூக நிலையம்.**
**அவரது உரையில் இருந்து....**

எமது சமூகம் சொந்த முயற்சியில் முன்னேற வேண்டும் என்ற எண்ணமுடையவர். உதாரணமாக நான் காணி ஒன்று வாங்குவதற்கு முயற்சித்த வேளை பணக்கஸ்டத்தில் கைவிடும் எண்ணத்தில் இருந்தேன். அதை அறிந்த அமரர்.கந்தையா அவர்கள் என்னைக் கூப்பிட்டுக் கடனாக எனக்கு பண உதவி புரிந்து அக்காணியை வாங்க வைத்தவர். அவரால் வளங்கப்பட்ட பணத்தை எப்படி செலுத்துவது என யோசித்த வேளையில் உனக்கு வசதி ஏற்படும் பொழுது தந்து விடு நான் உன்னைக்கேட்க மாட்டேன் என்றார். பல வருடங்களின் பின்பே அப்பணத்தை என்னால் செலுத்த முடிந்தது. என்றார்.

**ப.செல்லத்துரை**
**ஓய்வு நிலை அதிபர்**
**அவரது உரையில் இருந்து...**

ஒருக்கப்பட்ட மக்களுக்காக பல போராட்டங்களை செய்தவர். கைதடி மேற்கு கந்தசாமி கோயில் நிர்வாக சபை உறுப்பினராக இருந்த இவர் சமாதான வழியில் சமத்துவ வழிபாட்டுக்கான பேச்சு வார்த்தையில் முன்நின்று உழைத்தார். எடுத்துக் கொண்ட வேலையை துணிச்சலுடனும் பயம் இன்றியும் செய்து முடிப்பவர் அமரர் சி.கந்தையா ஆவர். கைதடியிலேயே தேனீர்க்கடையில் சமத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்தவரும் இவரேயாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி.தங்கராசா**

**செயலாளர்**

**மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகம்**

**கைதடி**

**அவரது உரையில் இருந்து சில துளிகள்....**

அமரர் கந்தையா அவர்கள் கையிற்ற சிட்டி கந்தசாமி கோயிலின் தீவிர பக்தர் ஆவார். எம்மால் அக்கோயில் மேற்கொள்ளப்படும் திருவிழா நிகழ்வில் உபயகாரரில் ஒருவரும் ஆவார். அவர் கைதடி மேற்கின் வளர்ச்சிக்கு உழைப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை அதற்கு அப்பாலும் அவரத செயல்பாடுகள் வியாபித்து நின்றன அவர் நவபுரம் கிராமத்தில் நாம் பாடசாலையை ஆரம்பித்த வேளையில் எம்முடன் சேர்ந்து பாசாலை வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.

**ம.சுதர்சினி**

**கைதடி மேற்கு சரஸ்வதி மாதர்சங்கம்**

**இவரால் மாதர்சங்கத்தின் சார்பில் சாதனைகளை உள்ளடக்கிய கவிதை சமர்ப்பிக்கப்பட்டது.**

**ம.நிர்மலா**

**தலைவர் சரஸ்வதி மாதர்சங்கம்**

**கைதடி மேற்கு**

**இவரால் இவரது பிள்ளைகள் சார்பில் இரங்கல் கவிதை சமர்ப்பிக்கப்பட்டது.**

**வ.சின்னத்தம்பி**

**மைத்துனர்**

**கடைசியில் குடும்பத்தினர் சார்பில் அவரது மைத்துனரால் நன்றியுரை செலுத்தப்பட்டு நிகழ்வு 6.15க்கு நிறைவு அடைந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையம் மூலம் கிடைத்த இரங்கலல் செய்திகள்

# ஆத்மா சாந்திப்பிரார்த்தனை

1- ஆலமரம்போல் இருந்து ஆளுமை செய்த ஒருவர்
2- தர்மயில்லமென பெயர் சூட்டி தானம் செய்த மறவர்
3- ஆகுதியானவர்களில் சிலர்தான் ஒளிகொண்டு தெரிவர்
4- அந்தவரிசையில் இவரென்று அனைவரும் புரிவர்
5- விருந்தோம்பல் கேட்டு ஐயா வியந்திருக்கிறேன்
6- சமூக விடுதலைக்கு கரங்கோர்தது கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்
7- சமூகத்திற்காய் இழந்தது ஏராளம்
8- உங்கள் தாயுள்ளம் கண்டேன் தாராளம்
9- வீறு கொண்ட விருட்சமாய் இளமையில்
10- நீறு பூத்த நெருப்பாய் இருந்தீர் ஆலைய உரிமையில்
11- காற்றின் திசையில் போகாத அலை
12- கர்மவீரனாய் வாழ்ந்தீர் இது உங்கள் வாழ்நாள் நிலை
13- சமூக நீதிக்காய் நின்றீர் முன்நிலை
14- சன சமூக நிலையத்திற்கும் தலைமை தாங்கி செய்தீர் அளப்பெரிய பங்கினை
15- தேக திடகாத்திரம்போல் விளையாட்டிலும் பல வென்று நீர்
16- வாழ்ந்து வென்றீரே பலர் அன்பினை
17- குடும்பத்தில் சிறந்த தலைவனாய்
18- பிள்ளைகளுக்கு நற்பண்பூட்டிய தந்தையாய்
19- வாழ்ந்த வள்ளல் நிறைகுடமே
20- எங்கள் உள்ளத்தோரம் இருக்கு உங்களுக்கு ஓரிடமே.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
இதய அஞ்சலிகளுடன்

**PK.திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை!

கைதடி மேற்கினை காலத்தால் அழிக்கவியலா அடையாளம்!
ஏற்றத்தாழ்வுகளுக்காய் எதிர்த்து நின்ற முற்போக்காளன்!
நாலுபேருக்கு நல்லது செய்ய எண்ணிய நற் சிந்தனையாளன்!
நாளும் இறைவனை வழிபட்ட பக்தியாளன்!
வேர்வை சிந்தி உயர்வுகண்ட உழைப்பாளன்!
கணீரென்ற குரலால் பணிந்திட செய்திடும்
சிம்மக்குரலோன்!
தலைமைத்துவத்தால் தனிச்சிறப்பு கண்ட பண்பாளன்!
அன்றைய காலத்தில் முன்னெடுத்தது நல் நோக்கம்!
ஊருக்காய் உறவுக்காய் செய்தவை எல்லாமே ஆக்கம்!
இவரின் முயற்சிகள் அடுத்துவந்த தலைமுறைக்கும் அளித்தது
ஊக்கம்!
இன்றும்கூட தெரிகிறது அதன் தாக்கம்!
சரஸ்வதி நிலையத்தின் முன்னை நாள் வழிகாட்டி!
எம் சமுதாயத்தின் எழுச்சிக்கான திசைகாட்டி!
உடலால் மறைந்தாலும் உணர்வால் உயிர்ப்புடன் என்றென்றும்
எமக்குள் நிறைந்திருப்பார்!
ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கிறேன்.

**அரவிந்த்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னவன் கந்தையாவிற்கான எனது அஞ்சலி

சிறப்பான கல்வியை நம் தலைமுறை பெறவேண்டும் என்பது உங்கள் உயரிய நோக்கம்!
பள்ளியிலும் கோவிலிலும் உங்கள் நற்செயலால் காண்கிறோம் தாக்கம்!
இதனால் அடைவோம் உயர்ந்த வாழ்வியல் ஆக்கம்!
என் பார்வைக்கு வணங்கத்தோன்றும் உங்கள் தோற்றம்!
உதிரம் சிந்த உழைத்து நீங்கள் கண்டதோ ஏற்றம்!
உங்களின் முயற்சிகளில் ஊரில் இன்று பலவற்றிலும் மாற்றம்!
உங்கள் பிரிவோ எமக்குள் ஏற்படுத்தியுள்ளது ஏக்கம்!

**சி. ஜெயந்திரராஜா**

# கண்ணீர் காணிக்கை

அன்புத்தம்பி குலம், தங்கள் தந்தை இந்த மண்ணை விட்டு மறைந்த செய்தியறிந்து ஆழ்ந்த கவலை கொண்டேன், அவர் பிரிவால் துயரமடையும் உங்களுக்கும் அவர் உதிரத்தில் உதயமான உங்கள் உடன்பிறப்புக்கள் யாவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து எனது கவலையை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன் .

சாதாரண ஒரு கட்டிட தொழிலாளியாக தனது வாழ்க்கையை ஆரம்பித்து தனது கடும் உழைப்பினாலும் திறமையினாலும் ஒரு பெரிய கட்டிட கலைஞனாக கைதடி கிராமத்தையே தன் பக்கம் திரும்பிப்பார்க்க வைத்த ஒரு மகா கட்டிட கலைஞன் மண்ணை விட்டு மறைந்து விட்டார் . இவர் பாசறையில் கட்டிட கலையை பயின்றவர்கள் பல நூறு எல்லோரும் இவரை கெற்வாஸ் என்று மரியாதையாக அழைத்து மகிழ்ந்தார்கள் இவர் பெயர் கைதடியில் தெரியாது கெற்வாஸ் என்றால் தான் தெரியும் அந்தளவு புகழ் பெற்றவர். அவர் புகழ் கைதடியின் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும் அவரது பிரிவால் தவிக்கும் பிள்ளைகள் அனைவருக்கும் ,உடன் பிறப்புக்களுக்கும் ,சொந்த பந்தங்கள் உற்றவர்கள் மற்றவர்கள் யாவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள் அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**நாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்த கண்ணீர் காணிக்கை

எமது சமுதாயத்தின் முன்னேற்ற பாதையின் வளர்ச்சியில் மிகபெரும் தொண்டினை நெறிப்படுத்தி எங்களின் பாமர மக்களுக்கு தன்னம்பிக்கையும் தொழில்வாய்பினையும் அள்ளி வழங்கிவர்களில் இவருக்கும் ஒரு முக்கியமான பொறுப்புணர்ச்சி இருந்ததை அறிந்திருக்கின்றோம். இவர் எங்களின் சொந்தங்கள் நல்ல முறையில் வாழ்வில் சந்தோசத்துடன் செழித்து வாழ்வதற்கு முதன்மை காரணகர்த்தாவாக இருந்த வேளையில் தன்னுடைய அற்றாட வேலைகளையும் இழக்க வேண்டி வந்த தருணத்திலும் துணிவோடும் உற்சாகத்தோடும் உழைத்து வெற்றி கண்ட இந்த நல்மனிதனின் இழப்பு ஈடு செய்யமுடியாது . என்றாலும் என்னசெய்வது அவருடைய ஆத்மா அமைதிபெற நாமும் இறைவனை வேண்டிகொள்வோமாக!!!!!!'

**மோகனதாஸ் சண்முகம்**
**(டென்மார்க்)**

# கண்ணீர் காணிக்கை

மேற்கில் எங்கள் சமூகம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு இவரின் பங்கும் மிகவும் பெரியது கம்பீரக்குரலால் அனைவரையும் கட்டிப்போடும் வல்லமையும் வீரமும் தன்னகத்தேகொண்டவர் உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**பாரத்குமார் வாரித்தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலாக தொடரும் நிஜங்கள்

கரையோடிப் போகும் வாழ்வில்
நிறைவோடு வாழ்ந்தவர் இவர்.
கனமான மனிதர் தான்- மிகவும்
கனிவான குணம் கொண்டவர்.

இளையோடிப் போன வாழ்வியலை
களைந்தெடுத்து நடு நிலை காட்டிய
எங்கள் சமுதாய முற்போக்காளர்
அடக்கு முறைகளை தகர்த்தெறிந்த
தற்சார்பற்ற ஓர் மாமனிதர்.

என் கிராமத்து வழித்தடங்களில்
இவர் தடம் பதித்த கால்த் தடங்கள்
இன்றும் தடையங்களாக நிலைத்து,
வரலாற்று மேன்மைகளாக உள்ளது.

சிலை வைத்து பூசிக்க வேண்டிய
சிலரில் இவரும் ஒருவர்தான் .
நிழலாக நிலையான கலையாத
சமுதாய வாழ்வியலை கட்டமைத்த
முடிசூடா எங்கள் கிராமத்து மன்னர்.

பலருக்கு வேலை கொடுக்கும்
"தலைமை முதலாளி"யும் இவரே
பலரும் தினம் பசியாற தர்ம
இல்லம் அமைத்தவரும் இவரே.
அன்பாய் அசைபோட்டு பண்ணாய்
பல காரியங்கள் பண்ணிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயாமல் உழைத்திடும் உழைப்பாளி
உழுதுண்டு வாழும் நல் விவசாயி
பக்தி பரவசம் கொள்ளும் முருகபக்தன்
முழு மனிதராக வாழ்ந்த எங்கள் கிராமத்து
முதன்மை முதல்வர்.

அமரரின் இழப்பால் மீளாத்துயரில் வாடும்
பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுக்கு ஆறுதல்
கூறுவதோடு அமரரின் ஆத்மா சாந்தி
கொள்ள இணுங்கித் தோட்ட முருகனிடம்
வேண்டிக்கொள்கிறோம்.

**பர.றொபின்சியா பிரான்ஸ்**

# ஆழ்ந்த அனுதாபங்கள்

கைதடி மண் தந்த மன்னவன்
உழைப்பால் உச்சம்தொட்ட உத்தமர்
களைப்பால் வருகின்ற அன்பர்களை
அன்பால் அழைப்பால் அரவணைத்து
இளைப்பாற வைக்கும் தர்ம இல்லம் தந்தவர்
கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தில்
தலைமைத்துவம் தாங்கி சமத்துவம் நிலைத்தோங்க
சளைக்காது பயணித்த தலைமகன்
எங்கள் மாமா ஈடுசெய்ய முடியா
தங்களின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர் உற்றார், உறவினர்கள்
அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்

**பாஸ்கர் வினாசித்தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்த அனுதாபங்கள்

எங்கள் கிராமத்தின் முன்னோடியும் சிறப்பான
சிந்தனையாளரும் நல்வழிகாட்டியும்
அனுபவக்கல்வியின் ஆசானும்
சமூக அக்கறை கொண்ட
மக்களின் மனதில் வாழ்ந்து
கொண்டிருக்கும் அமரர்
கந்தையா அவர்களிற்கு எமது
ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்
கொள்கிறோம் ஆத்மா சாந்தி
அடைய இறைவனை வேண்டுகிறேன்.

**க. சிறீதரன்**
**முகாமையாளர் மக்கள் வங்கி**
**தலைவர்**
**மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகம்**
**கைதடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்தி வேண்டி ...

காலன் தேடியவர்களை தவிர்த்து களவாடியது இவரை
நடமாடிய மனிதர்களில்
கனமான மனிதர் இவர் இனமானம் அதிகம்
தன்மானம் அதனிலும் அதிகம் அடிமைப்பட்டவர்களை அதிகம்
நினைத்தவர்
தன் மனதில் பட்டதினை அதிகம் செய்து முடிப்பவர்
பள்ளிப்பட்டறையில்
தீட்டாத கத்தி
சமுதாய மதிப்பினை உருவாக்கிய யுத்தி
பக்தியிலும் பகுத்தறிவிலும் மேலான பக்தி
மேலாண்மை நிர்வாகத்திலும் அதீத சித்தி
வேளாண்மை நிலம் சார்ந்த விஞ்ஞான ஞானி
காலன் களவாடி விட்டானே
அவர் கண் அயர்ந்தவேளை
எம் சிற்றூரில் சிறு வரலாறு இவருக்குண்டு யாரைக்கேட்டாலும்
சொல்வார்கள் ஏதோ ஒன்று
இவர் இருந்தவரை
ஊருக்கு அடையாளம்
இல்லை என்றாலும்
நினைவுகள் அடையாளம் நிலந்தரமான இடத்தை சென்றுவிட்டார்
நிறைவான வாழ்க்கை வாழ்ந்து விட்டு
சாந்தி அடையட்டும் ஆவி அவர் குடும்பம் அடையட்டும் அமைதி ...
சரஸ்வதி சனசமூகநிலையத்தின் சின்னதொரு டென்மார்க்
கிளையினரின் அமைதி வணக்கம் ....

**சரஸ்வதி சனசமூக நிலையத்தின்**
**டென்மார்க் கிளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்தி வேண்டி ...

அன்பால் எம்மை அரவணைத்து பண்பாய் வளரத்தெடுத்து
இன்பமாய் நாம் வாழவழி செய்த அப்பாவே
அறிவை புகட்டினீர் வழிதனை காட்டினீர்
அனைவரையும் ஒன்றாய் பாசத்தை ஊட்டினீர்
உழைப்பால் உயர்வு கண்டு உன்னத மானீர்
ஊருக்காகவும் பாடுபட்டீர் அதுவும்
உயர்ந்திட உழைப்பையும் தந்தீர்

எந்த துயரும் எம்மை அண்ட விட்டதில்லை
கஷ்ட துன்பங்களுக்கும் இடமளித்ததில்லை
எம்மை ஆளாக்கி மண்ணில் வாழ விட்டீர்
இன்று நீங்கள் எம்மோடு இல்லை
என்பதை நம்பமுடியவில்லை

என்ன செய்வோம்? ஏது செய்வோம்?
வழியெதுவும் புரியவில்லை
கண்கள் குளமாக கவலை மேலிடுகிறது
எப்படித் தாங்குவோம் உங்கள் இழப்பை?

போன வழிபார்த்து விழிபிதுங்கி நிற்கிறோம்
எம்மை தவிக்க விட்டு எங்கோ சென்று விட்டீர்
எங்கள் இதயங்கள் கணக்கின்றன
காலனின் தூய்மை கண்டு மனம் பதறித்துடிக்கிறோம்.
எங்கள் வழிகாட்டியே குலவிளக்கே
வாழ்வின் ஒளி காட்டியே
மண்ணில் நீர் மறைந்தாலும்
எம்மில் உறைந்திருப்பீர்
என்றென்றைக்கும் தெய்வமாய்....

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்திப் பிரார்த்தனை

அன்பின் இருப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய்,
பாசத்திற்குமோர் அர்த்தமாய்,
எங்கள் வாழ்வின் ஒளியாய்,
எம்மை வளர்த்தெடுத்து ஆளாக்கிய ஆளுமை,
மண்ணில் எமக்கென வாழ்ந்த மகத்தானவர்,
உழைப்பால் உயர்ந்த உத்தமர்,
எங்கள் தெய்வம் அன்புத்தந்தை எம்மை
தவிக்கவிட்டு இறைபதம்
சென்றுவிட்டார்.

பிரிவை எண்ணிக் கலங்குகிறோம்,
எண்ணம் குழம்புகிறோம்,
என்ன செய்வதென்று புலம்புகிறோம்,
கண்ணீர் பெருக்கெடுத்து காவிரியாய்
ஓடுகிறது,
எங்கோ சென்றுவிட்டீர்?
எப்படி தாங்கிக்கொள்வோம்?
நீங்களில்லா நாட்களை எப்படி
எதிர்கொள்வோம்?
மண்ணில் நீங்கள் மறைந்தாலும் எங்கள்
நெஞ்சங்களில் உறைந்திருப்பீர்...

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதய அஞ்சலிகள் ...

பிறந்தது
தவழ்ந்தது
வளர்ந்தது
வாழ்ந்தது
காலம் ஆனது என கட்டம் கட்டமாக எங்களோடு
பயணித்த எங்கள் ஆசைஅப்பா இன்று தனிமனிதனாக
இன்னொரு உலகிற்கு புறப்பட்டு விட்டார்.
வாழ்ந்தவர் கோடி
மறைந்தவர் கோடி
மக்களின் மனதில்
நிற்பவர் யார் "என்ற கவிஞர் எழுப்பிய வினாவுக்கு
விடையாக திகழ்ந்தவர்களில் ஆசை அப்பாவும்
ஒருவர் என்றால் மிகை அல்ல.
எங்களை பீடித்துள்ள அறியாமை இருளகற்ற அரும்பாடு
பட்டவர். கறுப்பென்றும் சிவப்பென்றும் வேற்றுமை
காட்டாது ஒற்றுமையை ஐக்கியத்தை
காட்டி வளர்த்தவர். தீண்டாமை கொடுமைகள்
தீமூட்ட வேண்டுமென செயற்பட்டவர்
விளையாட்டு மைதானத்திலே நிகரில்லாத வீரர்
இறைபக்தி உடையவர்
இந்த இழப்பு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

**துரைசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதய அஞ்சலிகள் ...

காலன் தேடியவர்களை தவிர்த்து களவாடியது
இவரை நடமாடிய மனிதர்களில்
கனமான மனிதர் இவர் இனமானம் அதிகம்
தன்மானம் அதனிலும் அதிகம்
அடிமைப்பட்டவர்களை அதிகம் நினைத்தவர்
தன் மனதில் பட்டதினை அதிகம் செய்து முடிப்பவர்
பள்ளிப்பட்டறையில் தீட்டாத கத்தி
சமுதாய மதிப்பினை உருவாக்கிய யுக்தி
பக்தியிலும் பகுத்தறிவிலும் மேலான பக்தி
மேலாண்மை நிர்வாகத்திலும் அதீத சித்தி
வேளாண்மை நிலம் சார்ந்த விஞ்ஞான ஞானி
காலன் களவாடி விட்டானே
அவர் கண் அயர்ந்த வேளை
எம் சிற்றூரில் சிறு வரலாறு
இவருக்குண்டு யாரைக்கேட்டாலும்
சொல்வார்கள் ஏதோ ஒன்று
இவர் இருந்தவரை ஊருக்கு அடையாளம்
இல்லை என்றாலும் நினைவுகள் அடையாளம்
நிரந்தரமான இடத்தை சென்றுவிட்டார்
நிறைவான வாழ்க்கை வாழ்ந்து விட்டு
சாந்தி அடையட்டும் ஆவி
அவர்குடும்பம் அடையட்டும் அமைதி.
சரஸ்வதி சனசமூக குடும்பத்தின்
அமைதி வணக்கம்

**வே.புவிராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை

உபசரிப்பதிலும் ஆளுமை
தட்டிக்கொடுப்பதிலும் ஆளுமை
அநீதி என்று வந்திட்டால் தட்டி

கேட்பதிலும் ஆளுமை
சமூகசேவையிலும் ஆளுமை
சமூகம் சார்ந்து குரல்
கொடுப்பதிலும் ஆளுமை
கட்டிட கலையிலும் ஆளுமை

எல்லாவற்றையும் அழகான
கண்ணோட்டத்தோடு பார்ப்பதிலும் ஆளுமை

ஆளுமை என்பது உங்கள்
உருவம் மாமா

**பொன்.சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 19 |
| 07 | 12 |
| 1934 | 2020 |

## அமரர். சின்னவன் கந்தையா
### (சுவிஸ் - கைதடி மேற்கு)

இருண்ட வானின் வெண்மதி
வரண்ட மண்ணில் நீரூற்று
முரண்ட சமூக முறைமைகளில்
முன்னரங்க போராளி நீ
திரண்ட சொந்தங்களிற்கு சாரதி
சாணையன் என்பதும் நின் செல்லப்பெயர்
சாதிக்கப் பிறந்தாய் சாதனைபடைத்தாய்
சமூக நீதிக்காய் சாதித்த சாணக்கியன்
சரியாசனம் தந்து கெறர் என்றனர்
சான்றோரும் ஆன்றோரும்
தொட்டகலை கட்டக்கலையில் கைதேர்ந்து
தோட்டக்கலையில் தொட்டது துலங்க
தோழமை கொண்ட உறவுகளிற்கு
தோள் கொடுத்தவள்ளல்
தொய்வின்றி வரமளித்தாய் நீ
சரஸ்வதியின் தலைமகன் நீ
சமூக உறவு கொண்டு கைதடிமண்ணின்
சகல பகுதி மக்களையும் இணைத்து
சமூக வலிமையைப்பேணிய
சக்திமிக்க படையணியின் தளபதி
சமூக முதல்வனே வணங்குகின்றோமுனை
சங்கமமானது இறையடியில் நின் ஆத்மா
வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த பெருமகனே
நன்மக்கள் தனைத்தந்த கர்ம வீரர் ஐயா
தங்கள் பிரிவால் துயர் கொண்டோம்
எம் கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்
குடும்ப உறவுகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம், கைதடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த்துளிகள்

மண்ணில்

22

07

1934



விண்ணில்

19

12

2020

## அமரர்
## சின்னவன் கந்தையா
(கட்டட கலைஞர்)

நேற்றுவரை எம்மோடு இருந்தாய்
எங்களில் ஒருவராய் அன்போடு வாழ்ந்தாய்
காலமெல்லாம் எமைக் காத்திருப்பாய் என்றிருக்க
கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு நீ போனாய்
ஆற்றொனாத் துயரமது ஊற்றாகி ஓடுதையா
உந்தன் பிரிவின் வேதனையால் உருக்குலைந்தோம் ஐயகோ!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

22.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 22 - 07 - 1934 |  | 19 - 12 - 2020 |

அன்பெனும் இனிய உள்ளம்
கொண்டிடும் இனிய குணத்தவரே!
உற்றவன் துடிதுடிக்க உறவுகள் கூடியள
விட்டெங்கு சென்றீரோ மீண்டிங்கு வருவீரோ!

பாசமும் நேசமும் மனிதர்க்கு மட்டுமல்ல உலகின்
உயிரினங்கள் அனைத்திற்குமென உரைவைத்த உத்தமனே!
ஈகையும் கொடையும் இறுதி வரை மூச்சாக கொண்டீரே!
உம் ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம் ஆண்டவனை !!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர்
## சின்னவன் கந்தையா

[illegible]
[illegible]
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் துளிகள்

மண்ணில்

22

07

1934



விண்ணில்

19

12

2020

# அமரர் சின்னவன் கந்தையா

எங்கள் கிராமத்தின் முன்னோடி
சமூகத்தின் முற்போக்காளன்,
நிலையத்தின் முன்னைய தலைவர்,
சமூகப்பணியில் பிரதானி
இன்னும் பல வகையில் எங்கள் கிராமத்தில்
உழைப்பால் உயர்வு கண்டோன்.

தாங்கமுடியாத பேரிழப்பு
ஈடு செய்ய முடியாத வெற்றிடம்
மீண்டும் காணவியலா பிரிவு
ஆற்றொணா துயரம்
உங்கள் ஆத்மா நிலைபெற வேண்டி
படைத்தவனிடம் வேண்டுகின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

தங்கள் பிரிவால் துயருறும்
சரஸ்வதி சனசமூக நிலையமும்
அதன் உப அமைப்புக்களும்

22.12.2020




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

22.07.1934



மறைவு

19.12.2020





அமரர் திரு. சின்னவன் கந்தையா

கைதடி மண்ணின் மைந்தனே!
பாசத்தின் உறைவிடமே!
அன்பின் திருவுருவமே!
பண்பின் ஒளி விளக்கே!
உற்றார் உறவு சுற்றம் பேணி!
வாழ்ந்த உத்தமனே!
பொல்லாத காலன் சொல்லாமற்
கொண்டு சென்றானே!
மீளாத் துயில் கொண்டு எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரோ!

அன்னாரின் பிரிவால் துயரும் அனைத்து உள்ளங்களிற்கும், குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போமாக...

ஓம் சாந்தி...... ஓம் சாந்தி....... ஓம் சாந்தி.......

பிரிவால்

ஈசன் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் துளிகள்

மண்ணில் உதயம்

22

07

1934



விண்ணில் சேர்வு

19

12

2020

அமரர்

## சின்னவன் கந்தையா



அன்புடன் எல்லோரையும் காத்தீர்.
ஆல் போல் வாழ வைத்து இல்லறம் இனிது கண்டீர்.
ஈகைகள் பல செய்தீர். உத்தம குணம் கொண்டீர்.
எல்லோரையும் தவிக்க விட்டு ஏன் இந்தப் பிரிவு தந்தீர்.
அன்புடனும் பாசத்துடனும் எம்முடன்
பேசி மகிழ்ந்திருந்து இன்று தெய்வமாகி விட்ட
அமரர் சின்னவன் கந்தையா
அவர்களின் திருப்பாதங்களுக்கு இக் கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும்
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயரடையும்
சின்னத்தம்பி சரஸ்வதி
குடும்பம்

22.12.2020




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்

கடந்த 19.12.2020 அன்று இவ்வுலக வாழ்வை
நிறைத்து சிவபதம் எய்திய எமது
குடும்ப ஒளிவிளக்கு
அமரர் **சின்னவன் கந்தையா**
அவர்களின் மறைவினால் நாம் திகைத்து
நிலைகுலைந்து நின்றபோது செய்தி அறிந்து
வந்த அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள்,
ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த அன்பு
நெஞ்சங்களுக்கும், தொலைபேசி மூலம்
அனுதாபங்களைத் தெரிவித்த உள்நாட்டு
மற்றும் வெளிநாட்டு உறவுகள்,
நண்பர்களிற்கும் இறுதிக் கிரியைகளின்போது
கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும்
அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியக் கிரியை
நிகழ்வுகளிற் கலந்து கொண்டு
சிறப்பித்தவர்களுக்கும் இம்மலரை அச்சுப்பதிவு
செய்த அச்சகத்தாருக்கும்,
எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.


**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




அமரர்களை குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றவருடையதாகிறது,
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்."

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



*S.P.S. Studio,*
*Kaithady.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org